செ.வெ.எண்: 271 நாள். 12.05.2011

## செய்தி வெளியீடு

தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிவரும் எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம், சென்னை–113–இல், 2011–2012–ஆம் கல்வியாண்டில் முதலாம் ஆண்டில், முழு நேர 3 ஆண்டுகளுக்கான கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பட்டயப் படிப்புகளில் சேர, மாணவ/மாணவியரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1 பட்டயப் படிப்பு விவரம்:

1) இயக்குதல், திரைக்கதை வசனம் எழுதுதல் மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பு பட்டயம்

2) திரைப்பட தொழில்நுட்பம் மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பு பட்டயம் (ஒளிப்பதிவு)

3) திரைப்பட தொழில்நுட்பம் மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பு பட்டயம் (படம் பதனிடுதல்)

4) திரைப்பட தொழில்நுட்பம் மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பு பட்டயம் (ஒலிப்பதிவு மற்றும் ஒலிப்பொறியியல்)

5) படத்தொகுப்பு மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பு பட்டயம்

கல்வித் தகுதி:

வரிசை எண்.1–இன் பட்டயப் படிப்பிற்கு அங்கீகாரம் பெற்ற, பல்கலைக் கழகத்திலிருந்து ஏதேனும் ஒரு பட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். வரிசை எண்.2 முதல் 4 முடிய பட்டயப் படிப்புகளுக்கு, மேல் நிலை கல்வித் தேர்ச்சி (இயற்பியல் மற்றும் வேதியியல்) /மின்னியல் மற்றும் மின்னணுவியல் (EEE) அல்லது மின்னணுவியல் மற்றும் தொலைத் தொடர்பு பொறியியல் (ECE) பட்டயப் படிப்புகளில் தேர்ச்சி மற்றும் வரிசை எண்.5–இன் பட்டயப் படிப்பிற்கு மேல்நிலை கல்வியில் ஏதேனும் ஒரு பிரிவில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படும் நாள், விண்ணப்ப படிவத்தின் விலை, அனுப்ப வேண்டிய முகவரி போன்றவை 18.05.2011 நாளிட்ட தினத்தந்தி மற்றும் Hindu நாளிதழ்களில் விளம்பரம் மூலம் வெளிவர உள்ளன. இது போன்றே கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள இணையதளத்திலும் வெளிவர உள்ளன.

இணைய தள முகவரி - www.tn.gov.in

தொலைப்பேசி எண். 044–22542212

இத்தகவலை முதல்வர், எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

முதல்வர்
எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும்
தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம்
சென்னை–600 113

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை–9